“விடாமுயற்சி உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது ஒன்றுமில்லை”

சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

வாராந்தப் பாடசாலை

**வாரம் 01– அலகு 06 திண்மங்கள்**

தரம் 08

தயாரிப்பு :- எம்பிலிபிட்டிய கல்வி வலயம்

பாடம் :- **கணிதம்**

பெயர் :- ..................

**அறிவுறுத்தல்கள் :**

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

## அலகு 09 - பின்னங்கள்



$=\frac{1}{2}$ அரைப்பங்கு என வாசிக்கப்படும்.



$=\frac{1}{3}$ மூன்றில் ஒன்று என வாசிக்கப்படும்.



$=\frac{1}{4}$ காற்பங்கு அல்லது நான்கில் ஒன்று என வாசிக்கப்படும்.



$=\frac{2}{5}$ ஐந்தில் இரண்டு என வாசிக்கப்படும்.

இவை பின்னங்கள் என அழைக்கப்படுகின்றன.

$\frac{1 \leftarrow \text{தொகுதி எண்}}{3 \leftarrow \text{பகுதி எண்}}$

முறைமைப் பின்னங்களின் தொகுதி எண் எப்போதும் பகுதி எண்ணை விட குறைவாகக் காணப்படும். உதாரணம்,

$\frac{1}{2}, \frac{1}{3}, \frac{2}{3}, \frac{4}{5}, \frac{7}{8}, \frac{3}{5}$

**பயிற்சி**

1) கீழேதரப்பட்ட உருக்களில் நிழற்றிய பகுதியை முழுவதின் பின்னமாகத் தருக.









2) பின்னத்திற்கு பொருத்தமானதாக நிழற்றுக.

i. $\frac{4}{7}$

ii. $\frac{5}{9}$

iii. $\frac{3}{8}$

iv. $\frac{3}{5}$

v. $\frac{2}{3}$

3) பகுதி எண் 7 ஆகவும் தொகுதி எண் 2 ஆகவும் உள்ள பின்னத்தை எழுதுக.

## அலகுப்பின்னங்கள்

தொகுதி எண் 1 ஆக உள்ள பின்னங்கள் அலகுப் பின்னங்கள் ஆகும்.

உதாரணம்:- $\frac{1}{2}, \frac{1}{3}, \frac{1}{4}, \frac{1}{5}, \frac{1}{7}, \frac{1}{9}$

இனி $\frac{2}{3}$ ஐ $\frac{1}{3}$ இன் மூலம் விளக்குவோம்.



$\Rightarrow \frac{2}{3}$ என்பது இரண்டு $\frac{1}{3}$ கள் ஆகும்.



$\Rightarrow \frac{3}{4}$ என்பது மூன்று $\frac{1}{4}$ கள் ஆகும்.